வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—செங்கேணி பழனி

தேதி 04.08.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன் மறைவிற்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மக்களவையில் இன்று, எதிர் கட்சிகளின் அமளி காரணமாக, அலுவல்கள் முதலில் ஒருமுறையும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

கடந்த 16 மாதங்களில் நடைபெற்ற ரோஜ்கார் மேளாக்களில், 11 லட்சம் பேர் வேலை பெற்றுள்ளதாக மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

இன்று பிறந்த நாள் காணும் புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமிக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி உட்பட தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*சிபு சோரன்*

ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன் மறைவிற்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். பழங்குடி மக்களுக்கு அடையாளம் பெற்றுத் தருவதிலும், தனி மாநிலமாக ஜார்கண்ட் உருவானதிலும் முக்கிய பங்காற்றிய சிபு சோரன் மறைவு, சமூக நீதிக்கு பேரிழப்பு என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, சமூக ஊடகத்தில் கூறி உள்ளார். மக்கள் நலன், குறிப்பாக, பழங்குடி மக்களின் நலனுக்கு மிகுந்த முக்கியத் துவம் அளித்தவர் சிபு சோரன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக

ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், சிபு சோரன் ஒரு உன்னதமான தலைவராக இருந்தார் என்றும், மக்களுக்காக அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் பொது வாழ்வில் உயர்ந்தவர் என்றும் பதிவிட்டுள்ளார். பழங்குடி சமூகங்கள், ஏழைகள், நலிந்தவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த அவரின் மறைவு வேதனை அளிப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் உட்பட வேறு பல தலைவர்களும், சிபுசோரன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். முன்னாள் ஜார்கண்ட் முதலமைச்சர் சிபுசோரன் புதுடெல்லியில் இன்று காலை காலமானார். 81 வயதான அவர் சிறுநீரக பிரச்சனையால் பாதிக்கப்பட்டு புதுடெல்லி சர் கங்காராம் மருத்துவமனையில், கடந்த 1 மாத காலமாக சிகிச்சையில் இருந்து வந்தார். சிபுசோரன் மறைவை ஒட்டி, ஜார்கண்டில் இன்று முதல், 3 நாள் அரசு முறைத் துக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற மாநிலங்களவையில், மறைந்த உறுப்பினர் சிபு சோரனுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இன்று அலுவல்கள், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவையின் துணைத் தலைவர் திரு ஹரிவன்ஷ், சிபுசோரன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து பேசுகையில் நலிவடைந்த பிரிவினரின் நலன்கள் மற்றும் உரிமைகளுக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் சிபு சோரன் என்றும் கூறினார்.

*மக்களவை*

மக்களவையில் இன்று, பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக எதிர் கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக அலுவல்கள் முதலில் பிற்பகல் 2 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. பீகார் மாநிலத்திற்கான சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து அவையில் விவாதிக்க வேண்டும் என எதிர்கட்சிகள் முக்கியமாக வலியுறுத்தின. நாட்டில் இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்படுவது இது முதல் முறை அல்ல என்றும் ஏற்கனவே பல முறை இப்பணிகள் நடந்து இருப்பதாகவும், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி பின்னர் நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். தேர்தல் ஆணையம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் மீது எதிர்கட்சி தலைவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சுதந்திரமான அரசியல் சாசன அமைப்பான தேர்தல் ஆணையம், ஜனநாயகத்திற்கு உகந்த, சரியான நடவடிக்கைகளையே மேற்கொள்வதாக மத்திய கால்நடை பராமரிப்புத் துறை இணை அமைச்சர் திரு எஸ்பி சிங் பகேல், நாடாளுமன்றத்திற்கு வெளியே, ஆகாஷ்வாணிக்கு அளித்த பிரத்யேகப் பேட்டியில் கூறினார்.

*மாண்டவியா-வேலை வாய்ப்பு*

நாட்டில் கடந்த 16 மாதங்களில் நடைபெற்ற ரோஜ்கார் மேளாக்களில் 11 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை பெற்றுள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார். இன்று மக்களவையில் துணைக் கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர், இதனைத் தெரிவித்தார். வேலை வாய்ப்பு நிலவரங்கள் குறித்து அமைச்சர் வெளியிட்ட மேலும் சில தகவல்கள்……

**(வாய்ஸ்)**

*மாண்டவியா-வேலை வாய்ப்பு*

**<u>(வாய்ஸ்)</u>**

ரிசர்வ் வங்கி அறிக்கையின் படி, கடந்த 10 ஆண்டுகளில் 17 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து இருப்பதாகவும், முந்தைய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியின் போது 10 ஆண்டுகளில் 3 கோடி வேலை வாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப் பட்டதாகவும் அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில், உற்பத்தி துறையில் வேலை வாய்ப்புகள் 15 சதவிகித அளவிற்கும், சேவைத் துறையில் 36 சதவிகிதம், மற்றும், வேளாண் துறையில் 19 சதவிகித அளவிற்கும் அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். இந்தியாவில் வேலை வாய்ப்பின்மை விகிதம், தற்போது 3.2 சதவிகிதமாக குறைந்து இருப்பதாகவும், வளர்ந்த நாடுகளை விட இது மிக குறைவு தான் என்றும் அவர் குறிப்பிட்டார். அடுத்த 4 ஆண்டுகளில் 4 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான, **பிரதமரின் விக்சித் பாரத் ரோஜ்கார்** திட்டத்திற்கு, 2 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாக திரு மன்சுக் மாண்டவியா மேலும் கூறினார்.

*நீதிமன்றம்-ராகுல்*

2020-ஆம் ஆண்டு சீனாவுடன் ஏற்பட்ட **கல்வான் பள்ளத்தாக்கு மோதல்** தொடர்பாக இந்திய ராணுவத்தை விமர்சிக்கும் வகையில் எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி பேசியது குறித்து, உச்சநீதிமன்றம் **மகிழ்ச்சியின்மை** வெளியிட்டுள்ளது. எதிர்கட்சித் தலைவர் தமது கவலைகளை நாடாளுமன்றத்தில் எழுப்பி இருக்க வேண்டுமே தவிர, சமூக ஊடகத்தில் பேசி இருக்க கூடாது என்று, நீதிபதிகள் திரு தீபாங்கர் தத்தா, **ஏஜி மாசிஹ்** ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று விசாரணைகளின் போது கூறியது. திரு ராகுல்காந்திக்கு எதிராக **எல்லைப்புற சாலைகள் அமைப்பின் முன்னாள் இயக்குநர்** தாக்கல் செய்துள்ள அவதூறு வழக்கில், விசாரணைகளை 3 வாரங்களுக்கு நிறுத்தி வைத்தும், வழக்கைக் கைவிட மறுத்தும் அலகாபாத் உயர்நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவு குறித்த திரு ராகுல் காந்தியின் மனு மீது நோட்டீஸ் அனுப்பவும், உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

*ரங்கசாமி-வாழ்த்து*

இன்று பிறந்த நாள் காணும் புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமிக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி உட்பட தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். புதுச்சேரிக்கு சிறந்த தலைமை வழங்கி மக்களின் எண்ணங்களை நிறைவேற்றி வரும் முதலமைச்சர் திரு ரங்கசாமி நீண்டகாலம் நலமுடன் வாழ தாம் வாழ்த்துவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகப் பதிவில் கூறி உள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, திரு ரங்கசாமியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, சட்டத் துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால், ஆயுஷ் துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ், தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டல் எல் முருகன், தமிழக முதலமைச்சர் திரு முக ஸ்டாலின், அசாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா ஆகியோரும் முதலமைச்சர் திரு ரங்கசாமிக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். வாழ்த்து தெரிவித்தவர்கள் குறித்து கூடுதல் விவரங்கள்............

**(வாய்ஸ்)**

*ரங்கசாமி-வாழ்த்து*

<u>**(வாய்ஸ்)**</u>

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமியை அவரது இல்லத்தில் சந்தித்து, சால்வை அணிவித்தும், பூங்கொத்து கொடுத்தும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். முன்னாள் துணை நிலை ஆளுநர் திருமதி தமிழிசை சவுந்தரராஜன் மற்றும் தமிழக தலைவர்கள் பலரும் முதலமைச்சர் திரு ரங்கசாமிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில அமைச்சர்கள், துணை சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தனர். புதுச்சேரி அரசின் தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான் தலைமையில், உயர்நிலை அதிகாரிகளும் முதலமைச்சர் திரு ரங்கசாமி நேரில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தனர். தமிழகத்தின் வெற்றிக் கழகத் தலைவர் திரு விஜய், இந்திய ஜனநாயக கட்சியின் நிறுவனர் டாக்டர் பாரிவேந்தர் உள்ளிட்டோர் முதலமைச்சர் திரு ரங்கசாமியை தொலை பேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

*ஸ்டாலின்*

2030-ஆம் ஆண்டிற்குள் தமிழகம், 1 லட்சம் கோடி ரூபாய் பொருளாதாரமாக மேம்படும் என்று, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறி உள்ளார். தூத்துக்குடியில் வியட்நாம் நிறுவனம் சார்பில் 16 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மின்சார கார் உற்பத்தி ஆலையை, இன்று தொடக்கி வைத்துப் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். கடந்த 4 ஆண்டுகளில் பத்தரை லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் தமிழகத்திற்கு ஈர்க்கப் பட்டுள்ளதாகவும், தொழில் வளர்ச்சியை மேம்படுத்த சிறப்பு கட்டமைப்பு உருவாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தென்மாவட்டங்களை தொழில் பகுதியாக மேம்படுத்தும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்தில், 250 ஏக்கர் பரப்பளவில், விண்வெளி பூங்கா அமைய உள்ளதாக, அவர் கூறினார். முன்னதாக தமிழக முதலமைச்சர் முன்னிலையில், 41 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

வானிலை

தென்மேற்கு வங்க கடல் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சிகள் காரணமாக, இன்றைய தினம், தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருவண்ணாமலை, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழைக்கும், கோவை மாவட்ட மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 10-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் 9 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 1 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

கிரிக்கெட்

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே லண்டனில் நடைபெற்ற 5-ஆவது மற்றும் இறுதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி, 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 2-க்கு 2 என்ற கணக்கில், தொடரை சமன் செய்துள்ளது. இப்போட்டியின் இறுதி நாளான இன்று, 374 ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி 2-ஆவது இன்னிங்ஸ் ஆடிய இங்கிலாந்து அணி, 367 ரன் மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது. ஸ்கோர் விவரம்

இந்தியா - முதல் இன்னிங்ஸ் 224 ரன்

2-ஆவது இன்னிங்ஸ் 396 ரன்

இங்கிலாந்து-முதல் இன்னிங்ஸ் 247 ரன்

2-ஆவது இன்னிங்ஸ் 367 ரன்

*மகளிர் கிரிக்கெட்*

மகளிர் அணிகளுக்கு இடையிலான, நாட்டின் முதலாவது, ஐபிஎல் பாணி 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் பெங்களூரில் இன்று தொடங்கி உள்ளன. வரும் 10-ஆம் தேதி வரை நடைபெற உள்ள, டி-20 மகாராணி கோப்பைக்கான இப்போட்டிகளில், மைசூர் வாரியர்ஸ், பெங்களூர் பிளாஸ்டர்ஸ், மங்களூர் டிராகன்ஸ், ஹூப்ளி டைகர்ஸ் உள்ளிட்ட அணிகள் பங்கேற்கின்றன.

*உடல் உறுப்பு*

நாட்டிலேயே உடல் உறுப்பு தானம் அதிகம் உள்ள மாநிலமாக, தெலங்கானா மாநிலம் மத்திய அரசிடம் விருது பெற்றுள்ளது. தேசிய அளவில் உடல் உறுப்பு தானங்களுக்கும், மக்கள் தொகைக்கும் இடையிலான விகிதம், 10 லட்சத்திற்கு, 0.8-ஆக மட்டுமே உள்ள நிலையில், கடந்த ஆண்டு தெலங்கானாவில் இந்த விகிதம், 4.88 சதவிகிதமாக பதிவாகி உள்ளது. தெலங்கானாவில் மாநில அரசின் ஆரோக்யஸ்ரீ திட்டத்தின் கீழ், உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை இலவசமாக வழங்கப்படுவதும், ஏழை-பணக்காரர் வித்தியாசமின்றி தேவை உள்ள அனைவருக்கும் உடல் உறுப்புகள் கிடைப்பதை உறுதிப்படுத்த, அம்மாநிலத்தில் தனி சட்டம் இயற்றப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன் மறைவிற்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மக்களவையில் இன்று, எதிர் கட்சிகளின் அமளி காரணமாக, அலுவல்கள் முதலில் ஒருமுறையும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

கடந்த 16 மாதங்களில் நடைபெற்ற ரோஜ்கார் மேளாக்களில், 11 லட்சம் பேர் வேலை பெற்றுள்ளதாக மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

இன்று பிறந்த நாள் காணும் புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமிக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி உட்பட தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/04.08.2025/Script.

-----------------------------